# QB365 Question Bank Software Study Material

## வேலை, ஆற்றல் மற்றும் திறன் முக்கியமான 1 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 11ம் வகுப்பு

## இயற்பியல்

மொத்த மதிப்பெண் : 50

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

50 x 1 = 50

1) $(2\hat{i}+\hat{j})$ N என்ற சீரான விசை 1 kg நிறையுள்ள ஒரு பொருளின் மீது செயல்படுகிறது. பொருளானது $(3\hat{i}+\hat{k})$ என்ற நிலை முதல் $(5\hat{i}+3\hat{j})$ என்ற நிலை வரை இடம்பெயருகிறது. பொருளின் மீது விசையினால் செய்யப்பட்ட வேலை ______.

(அ) 9J (ஆ) 6J **(இ) 10J** (ஈ) 12J

2) 80 m உயரமுள்ள ஒரு கட்டிடத்தின் மேலிருந்து 1 kg மற்றும் 2 kg நிறையுள்ள பந்துகள் போடப்படுகிறது. புவியை நோக்கி ஒவ்வொன்றும் 40 m விழுந்த பிறகு அவற்றின் இயக்க ஆற்றல்களின் விகிதம் ______.

(அ) $\sqrt{2}:1$ (ஆ) $1:\sqrt{2}$ (இ) 2 : 1 **(ஈ) 1 : 2**

3) 1 kg நிறையுள்ள ஒரு பொருள் 20 m $s^{-1}$ திசைவேகத்துடன மேல்நோக்கி எறியப்படுகிறது. அது 18 m உயரத்தை அடைந்தவுடன் கணநேர ஓய்வு நிலைக்கு வருகிறது. உராய்வு விசையால் இழக்கப்பட்ட ஆற்றல் எவ்வளவு? (g = 10 $ms^{-2}$ எனக்கொள்க)

**(அ) 20J** (ஆ) 30J (இ) 40J (ஈ) 10J

4) ஒரு இயந்திரம் நீரை தொடர்ச்சியாக ஒரு குழாயின் வழியாக இறைக்கிறது. நீரானது v என்ற திசைவேகத்துடன் குழாயை விட்டுச் செல்கிறது மற்றும் இறைக்கப்படும் நீரின் ஓரலகு நீளத்தின் நிறை m என்க. நீருக்கு இயக்க ஆற்றல் அளிக்கப்பட்ட விதம் யாது?

**(அ) $\frac{1}{2}mv^2$** (ஆ) $mv^3$ (இ) $\frac{5}{2}mv^2$ (ஈ) $\frac{5}{2}mv^2$

5) 4 m நிறையுள்ள ஒரு பொருள் - தளத்தில் ஓய்வு நிலையில் உள்ளது. அது திடீரென மூன்று துண்டுகளாக வெடித்துச் சிதறுகிறது. m நிறையுள்ள இரு துண்டுகள் v என்ற சம வேகத்தில் ஒன்றுக்கொன்று செங்குத்தாக இயங்குகிறது. வெடிப்பினால் உருவாக்கப்பட்ட மொத்த இயக்க ஆற்றல் ______.

(அ) $mv^2$ **(ஆ) $\frac{3}{2}mv^2$** (இ) $2mv^2$ (ஈ) $4mv^2$

6) ஒரு அமைப்பின் நிலை ஆற்றல் உயருகிறது. எனில் ______.

**(அ) ஆற்றல் மாற்றா விசைக்கெதிராக அமைப்பினால் வேலை செய்யப்படுகிறது**

(ஆ) ஆற்றல் மாற்றும் விசைக்கெதிராக அமைப்பினால் வேலை செய்யப்படுகிறது

(இ) ஆற்றல் மாற்றா விசையின் அமைப்பின் மீது வேலை செய்யப்படுகிறது

(ஈ) ஆற்றல் மாற்றும் விசையினால் அமைப்பின் மீது வேலை செய்யப்படுகிறது

7) R ஆரமுள்ள ஒரு செங்குத்து வட்டத்தை நிறைவு செய்ய m நிறையுள்ள பொருள் கீழ்முனையில் எந்த சிறும திசைவேகத்துடன் வட்டப்பாதையில் நுழைய வேண்டும்?

(அ) $\sqrt{2gR}$ (ஆ) $\sqrt{3gR}$ **(இ) $\sqrt{5gR}$** (ஈ) $\sqrt{gR}$

8) ஒரு மூடிய பாதைக்கு ஆற்றல் மாற்றா விசையினால் செய்யப்பட்ட வேலை?

(அ) எப்போதும் எதிர்குறியுடையது **(ஆ) சுழி** (இ) எப்போதும் நேர்குறியுடையது (ஈ) வரையறுக்கப்படாதது

9) ஒரு பொருளின் நேர்க்கோட்டு உந்தம், 0.1% உயர்ந்தால் அதன் இயக்க ஆற்றல் உயரும் அளவு ______.

(அ) 0.1% **(ஆ) 0.2%** (இ) 0.4% (ஈ) 0.01%

10) ஒரு பொருளின் நிலை ஆற்றல் $a-\frac{\beta}{2}x^2$ எனில் பொருளினால் உணரப்பட்ட விசை ______.

(அ) $F=\frac{\beta}{2}x^2$ **(ஆ) $F=\beta x$** (இ) $F=-\beta x$ (ஈ) $F=-\frac{\beta}{2}x^2$

11) காற்றால் இயங்கும் ஒரு மின்னியற்றி காற்று ஆற்றலை மின் ஆற்றலாக மாற்றுகிறது. மின்னியற்றியானது அதன் இறக்கைகளில் படும் காற்று ஆற்றலில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் மின் ஆற்றலாக மாற்றுவதாகக் கருதுக. $v$ என்பது காற்றின் வேகம் எனில், வெளியீடு மின்திறன் எதற்கு நேர்விகிதத்தில் இருக்கும்?

(அ) $v$ (ஆ) $v^2$ **(இ) $v^3$** (ஈ) $v^4$

12) சம நிறையுள்ள இரு பொருள்கள் $m_1$ மற்றும் $m_2$ ஒரே நேர்க்கோட்டில் முறையே $5ms^{-1}$ மற்றும் $-9ms^{-1}$ என்ற திசைவேகங்களில் இயங்குகின்றன. மோதலானது மீட்சி மோதல் எனில் மோதலுக்குப்பின் $m_1$ மற்றும் $m_2$ பொருள்களின் திசைவேகங்கள் முறையே______.

(அ) $-4ms^{-1}$ மற்றும் $10ms^{-1}$ (ஆ) $10ms^{-1}$ மற்றும் $0ms^{-1}$ **(இ) $-9ms^{-1}$ மற்றும் $5ms^{-1}$** (ஈ) $5ms^{-1}$ மற்றும் $1ms^{-1}$

13) ஒரு பொருள் தொடக்கப் புள்ளியில் வைக்கப்பட்டு $F = kx$ என்ற விசை அதன் மீது செயல்படுகிறது ($k$ என்பது நேர்குறி மதிப்புள்ள மாறிலி) $U(0) = 0$ எனில் $U(x)$ மற்றும் $x$ இடையே உள்ள வரைபடமானது______. (இங்கு $U$ என்பது நிலை ஆற்றலின் சார்பு)

(அ) 

(ஆ) 

**(இ)** 

(ஈ) 


14) $k$ என்ற விசை மாறிலி கொண்ட ஒரு சுருள்வில் ஒரு துண்டு மற்றொன்றை விட இரு மடங்கு நீளம் உள்ளவாறு இரு துண்டுகளாக வெட்டப்படுகிறது. நீளமான துண்டு பெற்றுள்ள விசை மாறிலியானது ______.

(அ) $\frac{2}{3}k$ **(ஆ) $\frac{3}{2}k$** (இ) 3K (ஈ) 6K

15) x- அச்சின் வழியே இயங்குமாறு கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பொருள் அதே திசையில் ஒரு விசைக்கு உட்படுத்தப்படுகிறது. அவ்விசையானது தொடக்கப்புள்ளியில் இருந்து பொருளின் தொலைவு $x$ ஐப் பொறுத்து $F(x)=-kx +ax^3$ என மாறுகிறது. இங்கு $k$ மற்றும் $a$ என்பவை நேர்குறி மதிப்புள்ள மாறிலிகள். $x \geq 0$ என்பதற்கு பொருளின் நிலை ஆற்றலுக்கான சார்பு வடிவம் ______.

(அ) 

(ஆ) 

(இ) 

**(ஈ)** 


16) மீட்சி மோதலில்_________.

(அ) இயக்க ஆற்றல் முதலில் அதிகரித்துப் பிறகு குறையும் (ஆ) இறுதி இயக்க ஆற்றல் மாறாமல் இருக்காது

(இ) தொடக்க ஆற்றலைவிட இறுதி இயக்க ஆற்றல் குறைவு

**(ஈ) தொடக்க இயக்க ஆற்றலும்,இறுதி இயக்க ஆற்றலும் சமம்.**

17) பொருள் ஒன்றின் இயக்க நான்கு மடங்காகும் போது, அதன் உந்தம்

**(அ) 2 மடங்காகும்** (ஆ) 3 மடங்காகும் (இ) 4 மடங்காகும் (ஈ) மாறாது

18) நீரை வெளியேற்றும் எஞ்சின் ஒன்றிலிருந்து நீரானது $2\ ms^{-1}$ திசைவேகத்தில் வெளியேறுகிறது. ஓரலகு நீளத்தில் உள்ள வெளியேறும் நீரின் நிறை $100\ kgm^{-1}$ எனில், எஞ்சினின் திறன்?

(அ) 400 W (ஆ) 200 W (இ) 100 W **(ஈ) 800 W**

19) நீரை வெளியேற்றும் எஞ்சின் ஒன்று குழாய் வழியாக தொடர்ந்து நீரை வெளியேற்றுகிறது. குழாயிலிருந்து வெளியேறும் நீரின் திசைவேகம் $v$ எனவும், குழாயின் ஓரலகு நீளத்தில் உள்ள நீரின் நிறை $m$ எனவும் கொண்டால், நீருக்கு கொடுக்கப்படும் இயக்க ஆற்றலின் வீதம்?

**(அ) $1/2\ mv^3$** (ஆ) $mv^3$ (இ) $1/2\ mv^2$ (ஈ) $1/2\ m^2v^2$

20) மீட்சி மோதலில்

(அ) இயக்க ஆற்றல் முதலில் அதிகரித்தப் பிறகு குறையும் (ஆ) இறுதி இயக்க ஆற்றல் மாறும்

(இ) தொடக்க ஆற்றலை விட இறுதி இயக்க ஆற்றல் குறையும்

**(ஈ) தொடக்க இயக்க ஆற்றலும், இறுதி இயக்க ஆற்றலும் சமம்**

21) கிடைத்தளத்தில் உள்ள உராய்வற்ற மேசையின் மீதுள்ள மரக்கட்டையில், துப்பாக்கிக் குண்டு மோதி, அதனுள் பொதிந்து விடுகிறது. கீழ்க்கண்டவற்றுள் எது மாறாதது?

(அ) உந்தமும், இயக்க ஆற்றலும் (ஆ) இயக்க ஆற்றல் மட்டும் **(இ) உந்தம் மட்டும்**

(ஈ) நிலை ஆற்றல் மட்டும்

22) m நிறை கொண்ட பொருள் ஒன்று v திசைவேகத்தில் இயங்குகிறது. இது நிலையாக உள்ள 2m நிறை பொருளின் மீது மோதலுறுகிறது. மோதலுக்குப் பின் நிலையாக இருந்த பொருளின் வேகம்

**(அ) 2v/3** (ஆ) 2v (இ) v/3 (ஈ) 3v

23) m நிறை கொண்ட ஒரு குண்டு v திசைவேகத்தில் சென்று, M நிறை கொண்ட மரக்கட்டையில் பொதிந்து விட்டால், இறுதி திசைவேகம்

(அ) $\sqrt{\frac{M}{M+m}}v$ (ஆ) $\sqrt{\frac{m}{M+m}}v$ **(இ) $\frac{M}{M+m}v$** (ஈ) $\frac{v}{2}$

24) ஒரு பொருளின் மீது செய்யப்பட்ட வேலை எதைப் பொருத்து அமையாது?

(அ) செயல்படுத்தப்பட்ட விசையை (ஆ) இடப்பெயர்ச்சிக்கும், விசைக்கும் இடைப்பட்ட கோணத்தை

**(இ) பொருளின் தொடக்க திசைவேகத்தை** (ஈ) இடப்பெயர்ச்சியை

25) தனி ஊசல் ஒன்று, ஒரு முழு அலைவில் செய்யும் வேலை

**(அ) சுழி** (ஆ) $\sqrt{mg}$ (இ) mg cos $\theta$ (ஈ) mg sin $\theta$

26) v திசை வேகத்தில் இயங்கும் m நிறை கொண்ட பொருள் ஒன்று 4m நிறை கொண்ட நிலையாக உள்ள ஒரு பொருளின் மீது மோதிலுறுகின்றது. மோதலுக்குப் பிறகு லேசான பொருள் அமைதி நிலைக்கு வந்தால், மீட்சியளிப்பு குணகத்தின் மதிப்பு

(அ) 0.5 **(ஆ) 0.25** (இ) 0.8 (ஈ) 0.4

27) பொருள் ஒன்றின் நிறை பாதியாக்கப்பட்டு, வேகம் இரு மடங்கானல், அதன் இயக்க ஆற்றல்

**(அ) 2 மடங்காகும்** (ஆ) 4 மடங்காகும் (இ) 8 மடங்காகும் (ஈ) மாறாது

28) 10m செங்குத்து உயரமுள்ள ஒரு சாய்தளத்தில் 2kg நிறை ஒன்று மேல்முனைக்கு நழுவிச் செல்ல 300J வேலை செய்யப்பட்டால், உராய்வு விசைக்கு எதிராக செய்யப்பட்ட வேலை?

(அ) 200J **(ஆ) 100J** (இ) சுழி (ஈ) 1000J

29) 800 $Nm^{-1}$ விசை மாறிலி கொண்ட விசை ஒன்று, பொருள் ஒன்றை 5cm லிருந்து 15 cm க்கு நீட்சியடைய செய்யும் வேலை

(அ) 16J **(ஆ) 8J** (இ) 32J (ஈ) 24J

30) ஒரு பந்து நழுவுதல் இன்றி சாய்வான தளத்தில் உராய்வின்றி இயங்குகிறது. பந்தின் மீது மேசையால் செய்யப்படும் வேலை.

(அ) நேர் (ஆ) எதிர் **(இ) சுழி** (ஈ) ஏதுமில்லை

31) ஒரு பொருள் புவியை நோக்கி தடங்கலின்றி விழுகிறது. எனில் மொத்த ஆற்றல்.

(அ) அதிகரிக்கும் (ஆ) குறையும் **(இ) நிலையாக இருக்கும்(மாறாது)** (ஈ) முதலில் அதிகரித்து பின் குறையும்

32) ஒரு இரும்பு கோலத்தின் நிறை 8 kg தாமிரக் கோளத்தின் நிறை 4 kg இரண்டும் ஒரே விட்டம் உடையது. ஒரு கோபுரத்திலிருந்து இரு கோளங்களையும் ஒரே சமயத்தில் கீழே போடப்படுகிறது. தரைக்கு மேலே 10 m உயரத்தில் உள்ள பொது அலை இரண்டும் சமமான ____________ பெற்றிருக்கும்.

**(அ) முடுக்கம்** (ஆ) உந்தம் (இ) நிலை ஆற்றல் (ஈ) இயக்க ஆற்றல்

33) ஒரு பந்தின் இயக்க ஆற்றல் E ஆனது $45^o$ கோணத்தில் கிடைமட்டத்தில் எறியப்படுகிறது. பந்து பறக்கும் பெருமை உயரத்தில் இயக்க ஆற்றல்

(அ) E (ஆ) $\frac{E}{\sqrt{2}}$ **(இ) $\frac{E}{2}$** (ஈ) சுழி

34) ஒரு மீட்சி மோதலில்

**(அ) உந்தம், இயக்க ஆற்றல் இரண்டும் மாறாது** (ஆ) இயக்க ஆற்றல் மட்டும் மாறாது

(இ) உந்தம் மற்றும் இயக்க ஆற்றல் இரண்டும் மாறக்கூடியது (ஈ) உந்தம் மட்டும் மாறாது

35) ஒரு மீட்சி மோதலில் மற்றும் மீட்சியற்ற மோதலில் இரண்டிலும் மாறாதது?

(அ) இயக்க ஆற்றல் **(ஆ) உந்தம்** (இ) அ, ஆ இரண்டும் (ஈ) இரண்டும் அல்ல

36) 3 kg நிறையுடைய ஒரு பொருள் தொடக்கத்தில் ஓய்வு நிலையில் உள்ளது. அது மேசையின் மீது 10 N கிடைமட்ட விசையை செயல் படுத்துகிறது. இயக்க உராய்வின் குணகம் = -3 எனில் 10 s ஆல் அளிக்கப்பட்ட விசையால் செய்யப்படும் வேலை யாது?

**(அ) 1470 J** (ஆ) 2000 J (இ) 900 J (ஈ) 30 J

37) ஒரு துகள் x அச்சின் வழியே x = 0 லிருந்து x = 7m வரை f(x) = 12 - 2x + $3x^2$ என்ற விசையினால் இயங்குகிறது எனில் செய்யப்படும் வேலை.

(அ) 205 J (ஆ) 390 J **(இ) 378 J** (ஈ) 291 J

38) ஆரவெக்டர் $\vec{r}$ கொண்ட கிடைத்தள வட்டப்பாதையில் $\omega$ என்ற கோணத்திசை வேகத்தில் பொருளொன்று சுழற்றப்படுகிறது. வட்டப்பாதையில் ஏதேனும் ஒரு புள்ளியில் அப்பொருளின் திசைவேகம்

**(அ) $v=r\omega$** (ஆ) $v=\frac{\omega}{r}$ (இ) $v=\frac{r}{\omega}$ (ஈ) $v=m\frac{\omega}{r}$

39) ஒரு பொருளின் மீட்சியளிப்புக் குணகம் (e)

(அ) e=0 (ஆ) e=1 **(இ) 0< e< 1** (ஈ) 0 > e > -1

40) ஒரு மீட்சி மோதலில் ________ மாறாதது

**(அ) இயக்க ஆற்றல்** (ஆ) உந்தம் (இ) இயக்க ஆற்றல் மற்றும் உந்தம்

(ஈ) இயக்க ஆற்றல் மற்றும் உந்தம் இரண்டும்

41) 'm' நிறை கொண்ட ஒரு துகள் $\gamma$ ஆரம் கொண்ட செங்குத்து வட்டத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் போது அதன் உயர்புள்ளி v யில் அத்துகளின் வேகம்

(அ) $mg = \frac{mv^2}{r}$ (ஆ) $mg > \frac{mv^2}{r}$ **(இ) $mg < \frac{mv^2}{r}$** (ஈ) $mg \geq \frac{mv^2}{r}$

42) நீட்சி மற்றும் குறுக்கம் x எனில் சுருள் நிலை ஆற்றல்.

(அ) $kx^2$ (ஆ) $\frac{Work}{time}$ (இ) $\frac{W}{t}$ **(ஈ) $\frac{1}{2}kx^2$**

43) (I) சுருள் வில் நீட்சியடையச் செய்யப்பட்டால் அதனுள் ஒரு மீள் விசை உருவாகிறது?
(II) ஆற்றல் மாற்றும் விசைகளில் செய்யப்பட்ட வேலை எந்தக் கூற்று சரியல்ல?

(அ) I மட்டும் **(ஆ) II மட்டும்** (இ) இரண்டும் சரி (ஈ) ஏதுமில்லை

44) ஒரு பொருளின் நிறை மற்றொன்றைப் போல் மெடங்கு ஆனால் அவை சம இயக்க ஆற்றலைப் பெற்றுள்ளன எனில், அவற்றின் நேர்க்கோட்டு உந்தங்களின் விகிதம்____

(அ) 1 : n (ஆ) n : 1 **(இ) $\sqrt{n} : 1$** (ஈ) $1 : \sqrt{n}$

45) A மற்றும் B களின் நிறைகளின் விகிதம் 3 : 1, ஒரே உயரத்திலிருந்து அவை வீழ்கின்றன. அவை பூமியைத் தொடுவதற்கு சற்று முன் அவற்றின் உந்தங்களின் விகிதம்_____

(அ) 1:3 **(ஆ) 3:1** (இ) 1:9 (ஈ) $1 : \sqrt{3}$

46) ஒரு பொருளின் உந்தம் 2% அதிகரிக்கும் போது, இயக்க ஆற்றலில் ஏற்பட்ட சதவீத மாற்றம்____

(அ) 2 **(ஆ) 4** (இ) 10 (ஈ) 8

47) ஒரு பொருளுக்கு 2N விசை அளிக்கப்படும் போது அது 2மீ விசையின் திசையில் இடப்பெயர்ச்சியை அடையும் எனில் வேலை____

(அ) 2 J (ஆ) 8 J **(இ) 4 J** (ஈ) 0 J

48) ஓய்வு நிலையில் உள்ள கார், மாறாத முடுக்கத்துடன் ஒரு பரிமாண இயக்கத்தில் செல்கின்றது. t காலத்தில் அதன் திறன் எதற்கு நேர்த்தகவில் இருக்கும்?

**(அ) t** (ஆ) $t^{1/2}$ (இ) $t^2$ (ஈ) $t^3$

49) பொருளின் உந்தம் 100% அதிகரிக்கப்படும்போது, இயக்க ஆற்றலில் ஏற்படும் உயர்வு____

(அ) 100% (ஆ) 200% **(இ) 300%** (ஈ) 400%

50) ஒரு துகளுக்கு 10 N விசை அளிக்கும் போது நேர்க்கோட்டில் 5 மீ தொலைவு செல்கின்றது. 25 J வேலை செய்யப்படும் போது, விசைக்கும் இடப்பெயர்ச்சிக்கும் இடையில் உள்ள கோணம்______

(அ) 30° (ஆ) 45° **(இ) 60°** (ஈ) 90°